# அன்னை தெரசா ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நல சங்கம்

பதிவு எண்.3200/CNI/2007

## சங்கம் அமைப்பு முறைகள்

1. (அ) சங்கத்தின் பெயர் : அன்னை தெரசா ஆட்டோ ஓட்டுநர் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர் நல சங்கம் (Annai Teresa Auto Ottunar & Amaippusara Thozhilalar Nala Sangam)

2. (ஆ) முகவரி : 43, நெல்சன் மாணிக்கம் சாலை சூளைமேடு, சென்னை – 600 094

3. சங்கத்தின் குறிக்கோள்:

(அ) உறுப்பினர்களுக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் வாழ்க்கை வளம்பெற பாடுபடுதல்.

(ஆ) அமைப்பு, முறைகளின்படி உறுப்பினர்களுக்கும் உதவி செய்தல்

(இ) உறுப்பினர்களின் வாழ்க்கைக்கு தேவையாவற்றை பூர்த்தி செய்தல்

(ஈ) அவர்களின் குறைகளை தீர்த்து வைத்தல்

(உ) உறுப்பினர்களின் வியாதி, வயோதிகம்,வேலையின்மை மற்றும் இறப்பு ஆகிய நேரங்களில் உதவி அளித்தல்

(ஊ) உறுப்பினர்களுக்கும் வேலையளிப்பவர்களுக்கும் இடையே ஏற்படும் பிரச்சனைகளை தீர்த்துவைத்தல்

(எ) அமைப்பு சாரா தொழிலாளர் நலனுக்காக பாடுபடுதல், கட்டுமான தொழில் மற்றும் தொழில் முனைவோர் நலம் பேணுதல், மற்றும் இதே குறிக்கோள் உடைய இதர அமைப்புகளுடன் இணைந்து செயல்படுதல்

(ஏ) உறுப்பினர்களின் சாதி,மத, இனம், மற்றும் மொழி வேறுபாடு இன்றி அவர்களின் நலன் கருதி பாடுபடுதல்

(ஐ) நோபல் லாரேட் அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட் (பதிவு எண். 961/1997) டின் வழிகாட்டுதலின் பேரில் பொதுமக்கள் நலனுக்காக செயல்படுதல்.

## சங்கத்தின் சட்டதிட்டங்கள்

(4) தமிழ்நாட்டில் உள்ள ஆட்டோ ரிக்சா ஓட்டுநர்கள், கட்டுமான தொழில், அமைப்புசாரா தொழில், மற்றும் பிற தொழில் செய்யும் 18 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு நபரும் உறுப்பினராக சேர விரும்பினால் முறையாக படிவத்தில் எழுத்து மூலம் விண்ணப்பித்து சங்கத்தால் அவ்வப்போது கொண்டு வரப்படும் விதிமுறைகளுக்கும், சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக வாக்குறுதி அளித்தால், சங்கத்தின் ஒரு சாதாரண உறுப்பினராக இடம் பெறுவதற்கு தகுதியுடையவராவர்.

5). சங்கம் சம்பந்தப்படாத நிறுவனம் அல்லது தொழிலில் இருப்பவர்கள் கூட சங்க நிறுவனத்தில் பணி செய்வதற்கு கௌரவ உறுப்பினர்களாக அனுமதிக்கப்படலாம். அந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவாக இருக்கவேண்டும்.

6. ஆட்டோ தொழில் செய்பவர்கள் வருட சந்தாவாக ரூ.60 செலுத்த வேண்டும். பிற தொழில்கள் செய்பவர்கள் நுழைவு கட்டணமாக ரூ.10/–, வருட சந்தாவாக ரூ.12/–ம் செலுத்தவேண்டும். வருட சந்தா செலுத்தாதவர்கள் தங்கள் உறுப்பினர் தகுதியை இழப்பார்கள். ஆயினும், சந்தா தொகையை நிலுவையுடன் செலுத்துபவர்கள் நிர்வாகத்தின் பரிந்துரையின் பேரில் மீண்டும் உறுப்பினர்களாக தொடர அனுமதிக்கப்படுவர்.

7. சங்கத்தின் நிதி நிலைமைகளைப் பொறுத்து நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அளிக்கும் நன்மைகளை அவ்வப்போது முடிவு செய்யும். குறைந்தபட்சம் ஆறு மாதங்களாக உறுப்பினராகவும், சந்தா தொகைகளை நிலுவையின்றி கட்டியவராகவும் உள்ள உறுப்பினரே சங்கத்தின் நன்மைகளை பெறத் தகுதியுடையவராவார்.

8. இச்சங்கத்தில் யாதொரு நிர்வாகிகள் மீது நடவடிக்கை எடுக்க சமபந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு முன்னதாகவே உரிய முன்னறிவிப்பு வழங்கப்படவேண்டும்.

9. எந்த ஒரு உறுப்பினராவது சங்கத்தில் அனுமதி பெறாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவாராயின் அவர் வேலை நிறுத்தம் தொடங்கிய நாள் முதல் சங்கத்தின் எந்தவித பயனையும் பெறும் தகுதியை இழப்பார்.

10. சங்க உறுப்பினர் எவரும் தன் வேலையளிப்பவருக்கும் தான் வேலை நிறுத்தம் செய்யும்போது அது பற்றிய அறிவிப்பை, வேலை நிறுத்தம் செய்யும் நாளிலிருந்து 6 வாரங்களுக்குள்ளாகவும், 14 நாட்களுக்கு முன்பாகவும்

தெரிவிக்காமல் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. எனினும், அறிவிப்பை வழங்க வேண்டுமாயின் அதன்படி நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சங்கத்தில் மொத்த உறுப்பினரில் பாதிக்கு மேற்பட்டவர்கள் இதற்கு ஆதரவு அளிக்க வேண்டும். வேலை செய்யும் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களை வைத்துக்கொண்டு சங்கத்திற்கு சாதகமாக வாக்களித்தல் வேண்டும்.

11. உறுப்பினர்களின் பதிவுப்புத்தகம், கணக்கு பதிவுப்புத்தகம் மற்றும் உரிய சங்க தீர்மானங்கள் பதிவு செய்யப்பட்ட புத்தகங்கள் நன்கு பராமரித்து வரவேண்டும். பதிவுப் புத்தகங்கள், தீர்மான புத்தகங்கள், உறுப்பினர் சந்தா புத்தகங்கள் வரவு – செலவு இருப்பு புத்தகங்களை உறுப்பினர்களின் ஆய்வுக்காக, சங்கப்பதிவு அலுவலகத்தில் விடுமுறை நாள் தவிர மற்ற நாட்களிலும் 5 மணி முதல் 7 மணி வரை தயாராக வைக்கப்படவேண்டும்.

12. சங்கத்தின் செயல்பாடுகள்: ஒரு மாநில தலைவர், அதிக பட்சம் பத்து மாநிலத்துணைத்தலவர்களை, ஒரு மாநில தலைமை பொதுச்செயலாளர், ஒரு மாநில பொதுச்செயலாளர்,அதிகபட்சம் பத்து மாநில துணைபொதுச்செயலாளர்கள், ஒரு மாநில பொருளாளர் மற்றும் அதிக பட்சம் 20 செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்கிய நிர்வாகக்குழு செயல்படும். மேற்கண்ட நிர்வாகிகள் 3 ஆண்டுக்கு ஒரு முறை பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்டின் மேனேஜிங்டிரஸ்டி அல்லது டிரஸ்டி இதன் தலைமை பொதுச்செயலாளராக செயல்படுவார்.

13. நிர்வாகக்குழு கூட்டங்களை மூன்று மாதத்திற்கு குறைந்தது ஒரு தடவையாவது நடத்தவேண்டும். இக்குழு வசேஷ கூட்டங்களை நடத்துவது அவசியம் என்று கருதும் பட்சத்தில் மாநில தலைவர் அக்கூட்டங்களை நடத்தவேண்டும், இக்குழு உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களிடமிருந்து ஒரு வேண்டுகோள் வரப்பெற்ற தேதியிலிருந்து 16 தினங்களுக்குள் மாநிலத்தலைவர் அக்கூட்டத்தைக் கூட்டவேண்டும். தவறும் பட்சத்தில் ஒரு செயற்குழு உறுப்பினரோ, அல்லது இரண்டு சாதாரண உறுப்பினர்களோ, உறுப்பினர்களின் எழுத்து மூலமாக வேண்டுகோளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு துணைத்தலைவர்களுடனோ, அவர்கள் இல்லாத பட்சத்தில் தலைமை பொது செயலாளருடன் அல்லது, அவர்கள் இல்லாத பட்சத்தில் பொது செயலாளருடன் அல்லது, அவர்கள் யாவருமே இல்லாத பட்சத்தில் கூட்டத்திற்கு அவைத் தலைவராக, தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினருடனோ, அச்சிறப்புக்கூட்டம் கூட்டலாம். இக்கூட்டத்திற்கான அறிவிப்பு கூட்டத்தில் விவாதிக்கப்படவேண்டிய பொருள்கள் பற்றி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டால் மட்டுமே கூட்டத்திற்குத் தேவையான எண்ணிக்கை இருந்ததாக கருதப்படும்.

14. சங்கத்தின் கூட்டங்களுக்கும், நிர்வாகக்குழு கூட்டங்களுக்கும், மாநில தலைவர் தலைமை வகித்து அமைதியைக் காப்பதோடு சகல நடவடிக்கை குறிப்புகளிலும் கையெழுத்திட வேண்டும். அவர்கள் அவசியம் என்று கருதும்போது எல்லா சங்கத்தின் அவசர கூட்டங்களையும் நிர்வாகக்குழுவின் அவசிய கூட்டங்களை கூட்ட அவருக்கு அதிகாரம் உண்டு.

15. மாநிலத்துணைத்தலைவர்கள் மாநிலத்தலைவருக்கு உதவி செய்யவும், அவர் இல்லாதபோது அவருக்காக செயல்படவும் வேண்டும்.

16. மாநிலத்தலைவரும், மாநிலத்துணைத்தலைவர்களும் கலந்து கொள்ள முடியாத கூட்டத்திற்கு அக்கூட்டத்தில் வந்திருக்கும் உறுப்பினர்களிடமிருந்து ஒருவரை அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கவேண்டும். எந்தப்பொருளை பற்றியாவது முடிவு செய்ய ஆதரவு கோரும்போது உறுப்பினர்களின் வாக்கு எண்ணிக்கை சமமாக இருக்கும் பட்சத்தில் அக்கூட்டத்தின் அவைத்தலைவர் முடிவு செய்யும் வாக்கு ஒன்று அளிக்க உரிமை உண்டு.

17. மாநில தலைமை பொதுசெயலாளர் சங்கத்தின் கடித போக்குவரத்தை கவனிப்பது, அலுவலக பணிகளை பிறநிர்வாகிகள் ஒத்துழைப்புடன் பேணுவது, கூட்டங்கள் நடத்துவது, மினிட் புத்தகம் பராமரிப்பது, பொதுக்குழுவை கூட்டுவது, மாநில தலைவர், மாநில பொதுச்செயலாளர், மாநில துணைத்தலைவர்கள் மற்றும் மாநில துணைபொதுச்செயலாளர்களை ஒருங்கிணைத்து சங்கம் சிறப்புற செயல்பட பாடுபடுவது

மாநில பொதுசெயலாளர் மாநில தலைமை பொதுசெயலாளருடன் இணைந்து அலுவலக நிர்வாகத்தை கவனிப்பது, பிற நிர்வாகிகளுடன் இணைந்து சங்க வளர்ச்சிக்கு பாடுபடுவது, வங்கி கணக்குகளை மாநில பொருளாளருடன் இணைந்து இயக்குவது.

18. மாநில துணைப்பொதுச்செயலாளர்கள், மாநில தலைமை பொதுச்செயலாளர் மற்றும். மாநில பொதுச்செயலாளர் செய்யும் பணிகளில் அவர்களுக்கு உதவிசெய்வார்கள்.

19. பொருளாளர் சங்கத்தின் கணக்குகளை சரிவர பராமரிப்பு செய்து வரவேண்டும். சங்கத்திற்கு சேரவேண்டிய தொகைகளை, அவர் வசூலிப்பதோடு, அதற்கான பற்று சீட்டுகளை வழங்கவேண்டும். தகுந்த

வவுச்சர்களின்பேரில் பணத்தை செலவிடவேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் சங்கத்திற்கான வரவு செலவு கணக்குகளை தாக்கல் செய்து அங்கீகாரம் பெறவேண்டும்.

20. சங்கத்தின் பொது உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றை கீழ் குறிப்பிட்டுள்ள செயல்களை நடத்துவதற்காக ஒவ்வொரு வருடத்திலும் ஏப்ரல் மாதம் கூட்டவேண்டும்.

அ. சங்கத்தினரால் செய்யப்பட்ட வேலைகளைப் பற்றி அறிக்கையை அங்கீகரிக்கப்படுவதும் வருடத்தில் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கையை அங்கீகாரம் செய்வது.

ஆ. மூன்றாண்டிற்கு ஒரு முறை சங்க நிர்வாகிகள், மற்றும் செயற்குழு உறுப்பினர்களை தேர்வு செய்வது.

இ. நிர்ணயிக்கப்பட்ட விதத்தில் அறிவிப்பு கொடுத்து விவாதிக்கப்படவேண்டிய இதர பொருள்கள் தொடர்பாக ஆலோசிப்பது.

ஈ. மாநில தலைவர் மற்றும் மாநில தலைமை பொதுசெயலாளர் தாங்கள் அவசியம் என்று கருதும் போதெல்லாம்சிறப்புக்கூட்டத்தைக் கூட்டலாம். மேலும் சங்க உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு பேர் கையொப்பமிட்டு பொதுக்குழுவை கூட்ட கோரிக்கை வைத்தால், அவ்வாறு கோரிக்கை வைத்த 30 நாட்களுக்குள் கூட்டத்தை கூட்டவேண்டும். மேற்சொன்ன முறையில் உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றும் தலைவர் அக்கூட்டத்தை கூட்ட தவறும் பட்சத்தில் துணைத்தலைவர் அல்லது தலைமை பொதுசெயலாளர் அல்லது துணைபொது செயலாளர்கள் அல்லது செயற்குழு உறுப்பினர்களை வைத்து மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் அவருக்கு அதிகாரம் அளித்து மேற்படி பொதுக்குழுவை கூட்டலாம். இக்கூட்டத்தை கூட்ட 15 நாட்கள் அவகாசம் அளித்து அறிவிப்பு வழங்கப்படவேண்டும். அந்த அறிவிப்பில் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டிய பொருள்கள் ஏதேனும் கூட்டத்தில் விவாதிக்கப்பட வேண்டியிருப்பின் அது தொடர்பான அறிவிப்பினை உறுப்பினர்களுக்கு ஏழு நாட்களுக்கு முன்பே கொடுக்கப்படவேண்டும். மொத்த உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் கலந்துகொண்டால் மட்டுமே கூட்டத்திற்கு தேவையான எண்ணிக்கை (கோரம்) இருந்ததாக கருதப்படும்.

21. அ. சங்க உறுப்பினர்களின் சந்தா தொகைகளும் இதர நன்கொடை தொகைகளுமே சங்கத்தின் பொது நிதியாகும். சங்கத்தின் பொது நிதியை தொழில் சங்கத்தின் சட்டப்பரிவு 15–ன் கீழ் சொல்லப்பட்டுள்ள பொருத்தமான கீழ் குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக செயல்படவேண்டும். தொழில்சங்க நிர்வாகிகளின் சம்பளமும் படிகளும் மற்றும் இதர செலவினங்களையும் கொடுப்பது.

ஆ. சங்க நிர்வாகத்திற்காக செலவுகள் மற்றும் பொது நிதிக் கணக்குகளை தணிக்கை செய்வது சம்பந்தமான செலவிடுதல்.

இ. தொழில் தகராறுகள் சம்பந்தமாக யாதொரு சட்ட நடவடிக்கையில் தொழிற்சங்கம் அல்லது ஏதேனும் ஒரு உறுப்பினர் கட்சிக்காரராக இருக்க தொழிற்சங்கம் என்னும் முறையில் அதனுடைய உறுப்பினருடைய உரிமைகளை அடைவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக வழக்கு நடத்துவது அல்லது எதிர்வாதம் செய்தல்.

ஈ தொழிற்சங்கம் அல்லது உறுப்பினர் சார்பாக தொழிற் தகராறுகளை நடத்துவது.

உ. தொழிற் தகராறுகள் காரணமாக ஏற்படும் இழப்பிற்காக உறுப்பினர்களுக்கு ஈடு செய்வது.

ஊ. மரணம், முதுமை மற்றும் வேலையின்மை ஆகிய காரணங்களால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கோ, அல்லது அவரை சார்ந்து இருப்பவர்களுக்கோ உதவிடுதல்.

எ. உறுப்பினர்களின் மரணம், நோய், அல்லது வேலையின்மை ஆகியவற்றிற்கு ஈடாக இன்சூரன்ஸ் பாலிசிகளை எடுப்பது, அல்லது பாலிசிகளுக்கு தேவைப்படும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது.

ஏ. உறுப்பினர்களுக்கு கல்வி, சமூகம், பொருளாதாரம், மேம்பட விழிப்புணர்வு அளித்தல், அரசின் நலத்திட்ட உதவிகளை பெற பாடுபடுதல் மற்றும் உறுப்பினர்கள் அல்லது அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் ஈமச்சடங்குகளுக்கான செலவினை அளித்தல்.

ஐ. வேலையளிப்பவர் அல்லது தொழிலாளி என்னும் முறையில் அவர்களை பாதிக்கும் பிரச்சனைகளை சங்கம் தலையிட்டு தீர்த்து வைப்பதும், அவர்களுக்கு பக்க பலமாக இருந்து உதவுவதும் சங்கத்தின் நோக்கமாகும்.

ஒ. எந்த நோக்கங்களுக்காக பொது நிதியிலிருந்து செலவிடப்படலாமோ அவ்வாறு செலவிடப்பட்ட தொகை அல்லது உறுப்பினர்களின் பொது நலத்திற்கு பயன் உள்ளதாக இருக்கும் என்ற வகையில் செலவிடப்பட்ட தொகையும் அந்த நிதியாண்டில் பொது நிதியில் சேர்ந்த வருமானத்தையோ அல்லது ஆண்டின் ஆரம்பத்தில் பொதுநிதியில் நிலுவையில் இருக்கும் தொகைகளிலோ, நான்கின் ஒரு பங்கிற்கு இருக்கக்கூடாது.

ஓ. அரசு அறிக்கையில் சொன்ன நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசிதழ் வெளியிடப்படும் நோக்கங்களுக்காக செலவிடுதல்.

22. சங்கத்தின் செலவுக்காக ரு.2000/,–க்கு மேற்படாமல் செலவு செய்ய கையில் பணமாக வைத்திருக்கலாம். இதர தொகை முழுவதும் செயற்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கிகளில் சங்கத்தின் பெயரில் முதலீடு செய்யப்படவேண்டும். மேற்படி தொகையானது மாநில பொது செயலாளர் மற்றும் மாநில பொருளாளர் ஆகியோரின் கூட்டு கையொப்பத்தின் பேரில் தான் வங்கியில் இருந்து எடுக்கப்படவேண்டும்.

23. செயற்குழுவில் இரண்டு கூட்டங்களுக்கு இடையில் அவசர செலவாக ரு.2000/–க்கு மேற்படாமல் அனுமதி கொடுக்கலாம். உறுப்பினர்களுடைய பொதுக்கூட்டத்தில் இரண்டு கூட்டங்களுக்கிடையே அவசர செலவு காரணமாக ரு.2000/–க்கு மேற்படாமல் செலவு செய்ய செயற்குழு அனுமதி கொடுக்கலாம். சங்கத்தின் நிதியிலிருந்து செலவிடப்படும் தொகைக்கான வவுச்சர்கள் அனைத்திலும் மாநில பொது செயலாளர் மற்றும் மாநில பொருளாளர். கையொப்பமிடவேண்டும்.

24. தொழிற்சங்கங்களின் சட்டபிரிவு 16–ன் கீழ் கூறப்பட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு உறுப்பினர்களின் சமூகநல ரீதியான ஆர்வத்தை பெருக்குவதற்கு செயற்குழு தனி நிதி ஒன்றை ஏற்படுத்தலாம்.

25. சங்கத்தின் கணக்குகளை தொழிற்சங்களின் சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகளை கொண்ட தணிக்கையாளர் ஒருவரால் வருடத்திற்கு ஒரு முறை தணிக்கை செய்யும்படி பார்த்துகொள்வது முக்கிய பொறுப்பாகும்.

26. சங்கத்தின் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மொத்த உறுப்பினர்களில் குறைந்த பட்சம் பாகத்தார் வாக்களிப்பதின் மூலம் சங்கத்தை கலைத்துவிடலாம்.

27. உறுப்பினர்களின் பொதுக்குழு கூட்டம் ஒன்றில் குறைந்த பட்சம் பாதிக்குமேல் கூடியுள்ள உறுப்பினர்களின் குறைந்த பட்சம் 60% பேர் ஆதரவாக வாக்களிப்பதின் மூலம் சங்கத்தின் விதிகள் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம் அல்லது ரத்து செய்யப்படலாம்.

29. சங்கத்தின் கிளைகள் மாவட்ட வாரியாக தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும்.. அவ்வாறு செயல்படும் மாவட்டங்களில் குறைந்த பட்சம் 25 உறுப்பினராவது இருக்கவேண்டும்.

30. கிளை அமைப்புகளில் ஒரு தலைவர் ஐந்து துணைத்தலைவர்கள், ஒரு செயலாளர், ஐந்து துணைசெயலாளர்கள், ஒரு பொருளாளர், மற்றும் பதினைந்து செயற்குழு உறுப்பினர்கள் வரை இருக்கலாம். ஒவ்வொரு கிளைகளுக்கும் சட்ட ஆலோசகர்கள் நியமிக்கலாம்.

31. கிளை அமைப்புகளுக்கு சங்கத்தின் பதிவு எண்ணின் உப எண் வழங்கப்படும்.

32. கிளைகளின் கணக்குகளை, வங்கியில் டெப்பாசிட் செய்யவேண்டும். அதிகபட்சமாக கையில் ரூ.2,000/ வைத்துக்கொள்ளலாம். வங்கி கணக்குகளை மாநில கமிட்டிக்கு மாநில பொதுச்செயலாளர் மற்றும் மாநில பொருளாளர், மாவட்ட கமிட்டிகளுக்கு செயலாளர் மற்றும் பொருளாளரும் கூட்டாக இயக்கவேண்டும். கிளை அமைப்புகள் பிரதி மாதம் வரவு செலவு கணக்குகளை மாநில தலைமைக்கு அனுப்பவேண்டும்.

33. ஒவ்வொரு கிளையும் மாநில கமிட்டியின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் செயல்படும் தங்கள் செயல்பாடுகள் குறித்து அறிக்கையினை மாநில கமிட்டிக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை அளிக்க வேண்டும்.

34. சந்தா தொகையை கிளை கமிட்டி பெற்றுக்கொள்ளலாம். மேற்படி சந்தாவில் 25% தொகையை மாநில கமிட்டிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

35. ஒவ்வொரு கிளை கமிட்டியும், தங்கள் கீழ் உள்ள உறுப்பினர்களின் பிரச்சனைகளை தீர்த்து வைக்கும். அவ்வாறு தீர்த்து வைக்க முடியாத பிரச்சனையை மாநில கமிட்டி தலையிட்டு தீர்த்து வைக்கும். மாநில கமிட்டியின் முடிவே இறுதியானது.

36. கிளை மற்றும் மாநில கமிட்டிகளுக்கு சட்ட ஆலோசகர்கள் கவுரவ நிர்வாகிகளை நியமிக்க கமிட்டிகளுக்கு அதிகாரம் உண்டு.